# ஆன்மிகத்தின் தேவையை வர்த்தக உலகம் உணரத் தொடங்கியுள்ளது

## ஜகி வாசுதேவ்



கோவை, பிப். 1: ஆன்மிகத்தின் தேவையை வர்த்தக உலகம் உணரத் தொடங்கியுள்ளது என்று ஈஷா யோக மைய நிறுவனர் சத்குரு ஜகி வாசுதேவ் கூறினார்.

சுவிஸ் நாட்டில் டவோஸ் நகரில் உலகப் பொருளாதார மையத்தின் வருடாந்திரக் கூட்டம் ஜன. 26 முதல் 29-ம் தேதி வரை நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற ஜகி வாசுதேவ் பேசியது:

உலகின் தீர்மான சக்தியாக உள்ளவர்கள் இக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர். இவர்களின் ஒவ்வொரு செயலும், நடவடிக்கையும் பல கோடி மக்களின் வாழ்க்கையை பாதிக்கும் தன்மை கொண்டது. ஆகவே, இத்தகைய தலைமைப் பண்பாளர்களின் உள்நிலை எப்படி இருக்கிறது என்பது முக்கியம்.

உலகில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளின் நோக்கம் மனிதகுல மேன்மையை அடிப்படையாகக் கொண்டது. அமைதியான, ஆனந்தமான தலைமையை உருவாக்க வேண்டும். அப்போதுதான் அடுத்தவர் மீது அக்கறைகொள்ளும் செயல்களில் ஈடுபட முடியும்.

மக்கள் நலனில் அக்கறை கொண்ட பொருளாதாரக் கொள்கைகளை வகுக்க வேண்டும். இதை வலியுறுத்தவே இக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளேன்.

இந்தியா வளர்ந்து வரும் சக்தியாக எல்லோராலும் கணிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தியாவின் திறமை குறித்து புதிய பார்வையை உருவாகி உள்ளது.

அரசியல், வர்த்தகத் தலைமை ஆகியவற்றில் உலக அளவில் ஏற்படுத்தியுள்ள தாக்கம் வருங்காலங்களில் தேவையான வளர்ச்சியை இந்தியாவுக்கு அளிக்கும்.

பொருளாதாரம் குறித்த கூட்டத்தில் ஆன்மிகவாதிக்கு என்ன வேலையென்ற கேள்வி எழலாம். ஆனால், கடந்த 4 ஆண்டுகளாகவே ஆன்மிகம் சார்ந்த விஷயங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் எடுத்துச் செல்லப்படுகின்றன.

மனிதவளம் என்பது பொருளாதார வளத்தை மட்டுமே சார்ந்தது என்ற நிலை படிப்படியாக மாறி ஆன்மிகத்தையும் சார்ந்தது என்ற நிலை வந்து கொண்டிருக்கிறது.

ஆன்மிகப் பணிகளின் பயன்களை வெளிப்படையாக புள்ளிவிவர அடிப்படையில் பட்டியலிட முடியாது. ஆனால், அதன் தேவையை வர்த்தக உலகம் தற்போது உணரத் தொடங்கியுள்ளது.